# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு


சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை (27.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 98




ராம்கோ RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதன்மைத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

தாக்குதலுக்குச் சென்ற வான்புலிகள் தலைவர் பிரபாகரனுடன்



தாக்குதலுக்குத் தயாராகும் வான்புலிகள்



தாக்குதலை முடித்துக்கொண்டு தளம் திரும்பிய வான்புலிகள்

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

# தாக்குதல் நடத்திய வான்புலிகள் வெற்றிகரமாக தளம் திரும்பினர்

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா வான்படை தளம் மீது வான்புலிகளின் இரு விமானங்கள் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் தாக்குதல்களை நடத்திவிட்டு பாதுகாப்பாக வன்னி படைத்தளத்திற்கு திரும்பிவிட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வான்படையினரின் கிபீர் மற்றும் மிக்ரக வானூர்திகளின் தரிப்பிடங்களே வான்புலிகளின் தாக்குதல் இலக்குகளாக இருந்ததாகவும் இதில் கிபீர் மற்றும் மிக் ரக வானூர்திகளுக்கு பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் படையினரின் கேந்திர நிலையங்களின் மீது இவ்வகையான தாக்குதல்கள் நடத்தப்படும் எனவும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வான்படையை இயக்குவது தலைவர் பிரபாகரனின் மகனே!

### இந்திய இணையத்தளம் செய்தி

விடுதலைப்புலிகளின் வான்படையை தலைவர் பிரபாகரனின் மகன் இயக்குவதாக இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவ் இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விடுதலைப்புலிகளிடம் மிக வலுவான கடற்புலிகள் அமைப்பு இருக்கின்றது. அது போல வான்புலிகள் அமைப்பு இருப்பதாகவும் அவர்களிடம் பல குட்டி விமானங்கள் இருப்பதாகவும் சில ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்டது. அடிக்கடி அந்த விமானங்களை புலிகள் பரிசோதித்துப் பார்ப்பதாகவும் தகவல்கள் வெளியானது.

ஆனால் புலிகள் வசம் உள்ள விமானங்கள் பற்றி உறுதியான எந்த தகவலும் இது வரை வெளிவராமல் இருந்தது.

நேற்று வான்புலிகளின் 2விமானங்கள் தாக்குதல் நடத்தியதன் மூலம் விடுதலை புலிகளிடம் விமானப்படை இருப்பது உறுதியாகி விட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தாக்குதல் குறித்து ஆராய ஐவர் அடங்கிய விசாரணைக்குழு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து ஆராய்வதற்கு ஐந்துபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறித்த சகல விடயங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளும் பொறுப்பு இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கூட்டுப் படைகளின் தளபதியும் விமானப் படை நிபுணர்கள் மூவரும் இக் குழுவில் இடம் பெறுகின்றனர். விடுதலைப்புலிகளின் விமானம் பயணித்த திசை எது,எங்கிருந்து புறப்பட்டு வந்தது, (04 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தாக்குதலின் எதிரொலி

## இலங்கைக்கு செல்லவேண்டாமென சர்வதேச நாடுகள் எச்சரிக்கை!

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீதான தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் படையின் குண்டுவீச்சைத் தொடர்ந்து இலங்கைக்கு செல்வது ஆபத்தானது என தனது குடிமக்களை அவுஸ்திரேலியாவின் வெளிவிவகாரத் திணைக்களம் எச்சரித்திருக்கின்றது.

வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் பல மணிநேரம் மூடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இந் நேரத்தில் இலங்கைக்கான உங்களது பயணத்தின் தேவையை மீள் பரிசீலனை செய்யுங்கள்.

ஏனெனில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதல் பழிவாங்கும் செயல் என அரசு கண்டனம்


(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட யுத்ததோல்வியை அடுத்து பழிவாங்கும் நோக்குடனேயே கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த முயற்சித்ததாக அரசாங்கம் கண்டித்துள்ளது.

தாக்குதலில் விடுதலைப்புலிகளின் இலக்கான தாக்குதல் விமானங்களை அழிக்க முடியாது போனது எனினும் தாக்குதலில் 3 விமானப்படையினர் கொல்லப்பட்டதுடன் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட விமானப் படையினரின் குடும்பங்களுக்கு அரசாங்கம் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது. யுத்தத்தில் தோல்வியடைந்த விடுதலைப் புலிகள் மக்களின் (04 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளிடம் விமானம் இந்தியாவுக்கும் அச்சுறுத்தல்!



### அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

உலகிலேயே தாக்குதல் விமானங்களைக் கொண்டுள்ள பயங்கரவாத அமைப்பு விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே. இவ்வாறு புலிகள் விமானங்களைக் கொண்டு இயங்குவதன் மூலம் இலங்கை மட்டுமன்றி இந்தியா உட்பட ஏனைய வலய நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.எனவே இது தொடர்பில் இந்திய கூடியகவனம் எடுத்து செயற்படவேண்டுமென அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே தெரிவித்தார்.

பாதுகாப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் தேசிய பாதுகாப்புக்கான ஊடகமையத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கடத்தல்களையும் அவர்களின் கப்பல்களையும் நாம் தடுத்து அழித்து வருகிறோம். ஆனால். இந்த விமானங்கள் யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டவையாகும். புலிகள் அப்போது (04 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள உணவகம் ஒன்றில் வைத்து நேற்று முற்பகல் 11 மணியளவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த முருகேசு சங்கரப்பிள்ளை (வயது-45) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் காரைநகரிலிருந்து யாழ் நோக்கி வரும் வழியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-3)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## சூப்பர் 8இல் மோதும் அணிகள்

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று ஆரம்பமாகும் சூப்பர் 8 ஆட்டத்தில் மோதும் அணிகளின் போட்டி அட்டவணை.

| | | |
|---|---|---|
| மார்ச் | 27 இன்று | மேற்கிந்தியதீவுகள் அணி -அவுஸ்திரேலியா அணி |
| மார்ச் | 28 | தென்னாபிரிக்கா அணி -இலங்கை அணி |
| மார்ச் | 29 | மேற்கிந்தியதீவுகள் அணி- நியூசிலாந்து அணி |
| மார்ச் | 30 | அயர்லாந்து அணி-இங்கிலாந்து அணி |
| மார்ச் | 31 | அவுஸ்திரேலியா அணி- பங்களாதேஷ் அணி |
| ஏப்ரல் | 01 | மேற்கிந்தியதீவுகள் அணி- இலங்கை அணி |
| ஏப்ரல் | 02 | பங்களாதேஷ் அணி- நியூசிலாந்து அணி |
| ஏப்ரல் | 03 | அயர்லாந்து அணி-தென்னாபிரிக்க அணி |
| ஏப்ரல் | 04 | இங்கிலாந்து அணி-இலங்கை அணி |
| ஏப்ரல் | 07 | பங்களாதேஷ் அணி- தென்னாபிரிக்கா அணி |
| ஏப்ரல் | 08 | அவுஸ்திரேலியா அணி- இங்கிலாந்து அணி |
| ஏப்ரல் | 09 | அயர்லாந்து அணி-நியூசிலாந்து அணி |
| ஏப்ரல் | 10 | மேற்கிந்தியத்தீவுகள் அணி-தென்னாபிரிக்க அணி |
| ஏப்ரல் | 11 | இங்கிலாந்து அணி -பங்களாதேஷ் அணி |
| ஏப்ரல் | 12 | இலங்கை அணி-நியூசிலாந்து அணி |
| ஏப்ரல் | 13 | அவுஸ்திரேலியா அணி - அயர்லாந்து அணி |
| ஏப்ரல் | 14 | தென்னாபிரிக்க அணி-நியூசிலாந்து அணி |
| ஏப்ரல் | 15 | பங்களாதேஷ் அணி-அயர்லாந்து அணி |
| ஏப்ரல் | 16 | அவுஸ்திரேலியா அணி- இலங்கை அணி |
| ஏப்ரல் | 17 | தென்னாபிரிக்கா அணி- இங்கிலாந்து அணி |
| ஏப்ரல் | 18 | அயர்லாந்து அணி- இலங்கை அணி |
| ஏப்ரல் | 19 | மேற்கிந்தியத்தீவுகள் அணி- பங்களாதேஷ் அணி |
| ஏப்ரல் | 20 | அவுஸ்திரேலியா அணி-நியூசிலாந்து அணி |
| ஏப்ரல் | 21 | மேற்கிந்தியதீவுகள் அணி-இங்கிலாந்து அணி (ச-5) |

## பங்களாதேஷ் சூப்பர் 8-ல் நுழைவு!

உலகக்கிண்ணத் தொடரில் மிக முக்கியமான போட்டியில் பெர்முடாவை ஏழு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய பங்களாதேஷ் அணி உலக கிண்ணத் தொடரின் சூப்பர் 8 சுற்றுக்கு முதல் முறையாக முன்னேறியது.

லீக் சுற்றில் படுமோசமாக ஆடிய இந்திய அணியினர் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஒருவேளை பெர்முடா வென்றால் சூப்பர் 8 சுற்றுக்குள் நுழையலாம் என்று கனவு கண்டனர். ஆனால் பங்களாதேஷ் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் போர்ட் ஒவ் ஸ்பெயினில் நடந்த பி பிரிவு லீக்போட்டியில் பங்களாதேஷ் அணி கத்துக்குட்டி பெர்முடாவை சந்தித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் களத்தடுப்பை தேர்வு செய்தது. மழை விட்டு விட்டு பெய்ய ஆட்டம் ஆரம்பமாவதில் தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து 41 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடத்த முடிபு செய்யப்பட்டது. முதல் ஓவரிலேயே மோர்டாசா மிரட்டினார். இவரது வேகத்தில் அவுட்டர் பிரிஜ் ஆட்டமிழந்தார்.

மீண்டும் மழை குறுக்கிட 35 ஓவர்களாக குறைக்கப்பட்டது. ஆட்டம் ஆரம்பமாகியதும் மோர்டாசா இன்னொரு விக்கெட்டை வீழ்த்தினார். இம் முறை வீழ்ந்தவர் போர்டன். 02 ஓட்டங்களுடனும் சயத் ரசேல் பந்தில் ஹெம்பி ஓட்டம் எதனையும் பெறாமல் வெளியேறினார்.

மழை மீண்டும் தலைகாட்ட போட்டி 30 ஓவர்களாக குறைக்கப்பட்டது. அப்துர் ரசாக் பந்து வீச்சில் ரொய்மேய்ன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மழை மீண்டும் பெய்ய போட்டி 21 ஓவர்கள் கொண்டதாக நடத்தப்பட்டது,

கடைசிக்கட்டத்தில் மைனர்ஸ் 23, கேன் 16 அதிரடிகாட்ட பெர்முடா அணி 21 ஓவர்களில் 94 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. பின்னர் இலகு இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணி குதமின் வேகத்தில் தடுமாறியது. இவரது பந்து வீச்சில் தமிம்இக்பால் 1ஹாரியார் ரபீஸ் 12 அப்தாக் அஹமது 7 விரைவாக ஆட்டமிழந்தனர்.

ஆரம்பம் தகர்ந்தபோதும் சகிபுள் ஹசன் 26 அஷ்ரபிள் 29 இணைந்து வெற்றியை உறுதி செய்தனர். பங்களாதேஷ் அணி டக்வெர்த் லூயிஸ் முறையில் 17.3 ஓவரில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 96 ஓட்டங்களை எடுத்து அசத்தல் வெற்றி பெற்றது. (ச-5)

## க.பொ.த (உ/த)பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2007 ஆம் ஆண்டு விடைத் தாள் மதிப்பீட்டு பணிக்கு ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.க.பொ.த.உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபட விரும்பும் பிரதம பரீட்சகர் , உதவிப் பரீட்சகர் பதவிகளுக்கு பரீட்சை திணைக்களம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

கடந்த வருடம் விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடு பட்டவர்களுக்கு விண்ணப்பப்படிவங்களை பரீட்சைத் திணைக்களம் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

விண்ணப்பத்திரம் கிடைக்காதவர்கள் போட்டோஸ்ரட் செய்த விண்ணப்பங்கள் மூலமும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங் கள் தேவையானவர்கள் 011 2634 615 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கைப்பை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன அடங்கலாக ஆவணங்கள் அடங்கியகைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதி கொடிகாமத்தை சேர்ந்த செல்வராசா ரெங்கநாயகி என்பவரது அடையாள அட்டைகள் அடங்கிய கைப்பையே ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (ச)

## மக்கள் வங்கியின் மகளிர் அதிர்ஷ்ட மாதம்


PEOPLE'S BANK



மக்களின் உயிர்நாடியான மக்கள் வங்கியில் 2007 மார்ச் 08-ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 08-ம் திகதி வரை மகளிர் அதிர்ஷ்ட சேமிப்புப் பத்திரத்தினைப் பெற்றுத் தங்கள் சேமிப்பினை இரண்டு மடங்காக்குங்கள்!

உங்கள் அதிர்ஷ்டத்தினைப் பரீட்சிக்க தங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக்கு இன்றே விரையுங்கள்!

தமிழ் புத்தாண்டு தினத்தன்று அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு மக்கள் வங்கிக் கிளையிலும் நடைபெறும்.

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி

அனுசரணை


## சிறிபதி எம்.பிக்கு இன்று பிணை?

(கொழும்பு)

அரசாங்க பொதுச் சொத்தை சொந்தப் பாவனைக்காக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சிக்கு பிணை வழங்குவது தொடர்பான தீர்ப்பு இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர், அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் உறுப்பினர் என்பதால் அவ்விடயம் தொடர்பாக பொது மக்களை சந்தித்து விபரங்களை சேகரிக்க வேண்டியுள்ளது.

மக்கள் சந்திப்ப தற்கு வேறு வழி இல்லை என்பது டன் பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டியிருப்பதனாலும் அவருக்கு பிணை வழங்க வேண்டும் என்று பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன நீதிவானிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

## தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி வீதி அருள் மிகு செல்வநாகபூசணி அம்பாள் திருக்கோயிலின் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் இடம் பெறவுள்ளது. (ச-3)

## உடன் விற்பனைக்கு


மிகவும் நல்ல நிலையில் உள்ள சொந்தப் பாவனையில் உள்ள 226-XXXX இலக்கமுடைய வெள்ளை நிற மிற்சுபிசி தயாரிப்பிலான 13 1/2 அடி அலுமினிய BODY உடைய 4560 CC கன்டர் ரக டெலிவறி வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-021-2263594 (846)


## நல்லூர் பிரதேச சபை

**திருநெல்வேலிச் சந்தை வாகனத்தரிப்பிட வரி அறவீடு மற்றும் கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்கள்-2007**

மேற்படி இறைச்சிக்கடைகளும் வாகனத் தரப்பிடமும் 05.04.2007 தொடக்கம் 31.12. 2007 வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

| விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய (வற் தவிர்ந்த) ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|
| 01. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 139220.00 |
| 02.கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 120485.00 |
| 03.பலாலி வீதி,ஆடியபாதம் வீதி,பாடசாலை வீதி வாகன தரிப்பிடக் கட்டணம்(வாகனத்தரிப்பிட குறியீட்டில் மட்டும் நிறுத்துதல் வேண்டும்) | 250.00 | 2500.00 | 100000.00 |

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 03.04.2007 செவ்வாய்க்கிழமை மு.ப.12.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 04.04.2007 புதன்கிழமை மு.ப.12.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி 04.04.2007 புதன்கிழமை பி.ப.2.00 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி,
26.03.2007

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C-664)

## உலக நாடக தினம் 2007

ஊடகம் I : 'மோடி'

ஊடகம் II : '2004-9.0'

இடம் : கைலாசபதி கலை அரங்கு

காலம் : 27-03-2007 செவ்வாய்

(மு.ப 11.00 - 12.00)

' மொழி தரும் சொற்கள் பொருளை இழந்தன '

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வெறுவெளி,

யாழ். பல்கலைக் கழகம்.

(இ)

முன் எப்பொழுதையும் விட உலகம் இப்போது நெருங்கிய பிணைப்பு கொண்டிருக்கின்றது. சட்ட நியாயத்தின்படி தகராறுகள் தீர்வதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

–டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# கட்டுநாயக்கா மீதான விமானத் தாக்குதல்

நாட்டின் கேந்திர மத்திய நிலையமான கட்டுநாயக்கா சர்வதேச விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் விமானங்கள் குண்டுத் தாக்குதல்கள் நடத்தியுள்ளன.

விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் இலங்கையின்வரலாற்றிலும் இவ் விமானத்தாக்குதல் முக்கியமானதோர் யுத்த முனைப்பாகக் கருதப்படக்கூடியது.

நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்ற இவ் விமானக் குண்டுத்தாக்குதல் இலங்கையின் அரசியல் புலத்திலும், படைத் தரப்பிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது.

விடுதலைப்புலிகளை முற்றாக தோற்கடிப்பதற்கு மூன்று வருடங்கள் தேவையென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பின் போது கூறியிருந்தார்.

இவ்வாறு அவர் கூறி ஒரு மாதம் கடப்பதற்குள் கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது விடுதலைப்புலிகள் விமானத்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனை மேலும் விரிவாகக் கூறுவதாயின் விடுதலைப்புலிகளின் விமானப் படை தனது முதலாவது கன்னித் தாக்குதலை இலங்கையின் அதிஉயர் கேந்திர நிலையமான கட்டுநாயக்கா விமானத்தளத்தில் 26 மார்ச் 2007 அன்று அதிகாலை 12.45 மணியளவில் நடத்தியுள்ளது என்று கூறிக்கொள்ளலாம்.

இதற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் விமானம் ஒன்று பலாலி விமானப் படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வெளிவந்த போதிலும் அதனை உறுதி செய்யமுடியாது போயிற்று.

எனவே விடுதலைப்புலிகளின் விமானப் படையின் கன்னித் தாக்குதல் கட்டுநாயக்கா மீதான தாக்குதல் என்றே வரலாற்றுப் பதிவு இடம்பெறும்.

விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விமானத்தாக்குதல் நடத்தியதன் மூலம்,

- இனிவரும் காலங்களில் இடம் பெறும் யுத்தத்தில் விடுதலைப்புலிகளின் யுத்த விமானங்களும் பயன்படுத்தப்படும்.
- தென்இலங்கையில் பாராளுமன்றம் முதல் எண்ணெய்க் குதங்கள் வரையான முக்கிய இடங்களை காப்பாற்றுவதற்கு இலங்கை அரசு அதிகளவு பொருளாதாரத்தையும் படையினரையும் செலவிட வேண்டியிருப்பதுடன் அதிநவீனவிமான எதிர்ப்பு கருவிகளையும் கொள்வனவு செய்யும் தேவை உருவாகும்.
- விடுதலைப்புலிகளை யுத்தத்தின் மூலம் வெல்லுவோம், அவர்களை மூன்று வருடத்திற்குள் முற்றாக தோற்கடித்து விடுவோம் என்ற பொறுப்பற்ற கதைகளை பொறுப்பானவர்கள் ஒதுக்கிவைத்திருக்க வேண்டி கட்டாயம் உருவாகும்.
- சிறிபதி சூரியாராட்சி, மங்கள சமரவீர, ரணில் விக்கிரசிங்க ,சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் கொண்ட குழுவொன்று புலிகளின் விமானத்தாக்குதலை தமது பிரசாரத்தின் மகுடமாகக் கொண்டு அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிரான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபடுவர்.
- விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல் சமாதானத்தை வலியுறுத்துவதாக தென் இலங்கை அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினரும் வெளிநாட்டு பிரதிநிதிகளும் கருத்து கூறுவர்.

ஒட்டுமொத்ததில் இலங்கையின் சமகால யுத்த நகர்வுகள் உடனடியான ஸ்தம்பிதத்தை அடைந்து கொள்ளும் என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிக்கொள்ளாம்.

# பிரகடனப்படுத்தப்படாத 4ஆம் கட்ட ஈழப் போரில் 945 படையினர் பலி

பிரகடனப்படுத்தப்படாத 4ஆம் கட்ட ஈழப் போரில் 945 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக ஆங்கில வார இதலொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

மன்னார்ப்பகுதி மீது படையினரின் 57ஆவது படையணி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது. முதலில் விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் 4கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறியிருந்த படையினர் அன்று இரவு மூண்ட பெரும் சமரைத் தொடர்ந்து தமது நிலைகளுக்கு தந்திரமாக பின்வாங்கி இருந்தனர்.

இச்சமரில் 9 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 5 அதிகாரிகள் உட்பட 63 படையினர் காயமடைந்துள்ளனர் என படைத்தரப்பு தெரிவித்திருந்தது. இவர்கள் அனைவரும் 57ஆவது படையணியைச் சேர்ந்தவர்கள். இம்மோதல்களுக்கு அஞ்சி 51 சிங்கள மக்களும் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து வவுனியா நகருக்குள் சென்றுள்ளனர்.

இதனிடையே பிரகடனப்படுத்தப்படாத 4ஆம் கட்ட ஈழப்போரில் டிசம்பர் மாதம் 2005 ஆம் ஆண்டில் இருந்து 2007ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் வரையில் 945 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் இராணுவத்தினர்–599,கடற்படையினர் –226,விமானப்படையினர் –07, காவல்துறையினர் –72, ஊர்காவல் படையினர் –41 பேர் என அடங்குவர்.

இவற்றில் முக்கிய சில மோதல்கள் வருமாறு, ஜூலை 28ஆம்நாள் மாவிலாறில் இடம்பெற்ற மோதல்களில் 2 அதிகாரிகளும் 15 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன் 8 அதிகாரிகளும் 113 இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர்.ஓகஸ்ட் மாதம் 03ஆம் நாள் மூதூரில் இடம் பெற்ற சமரில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 7 அதிகாரிகளும் 94 இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர்.

ஓகஸ்ட் மாதம் 11ஆம் நாள் முகமாலை தீவுப் பகுதிகளில் இடம்பெற்ற சமரில் 12 அதிகாரிகளும் 180 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன் 47 அதிகாரிகளும் 778 இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர்.ஓகஸ்ட் மாதம் 27ஆம் நாள் சம்பூரில் இடம்பெற்ற சமரில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 11 அதிகாரிகளும் 156 இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர்.

செப்டம்பர் மாதம் 05ஆம் நாள் முகமாலையில் இடம்பெற்ற சமரில் 20 அதிகாரிகளும் 36 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன் 10 அதிகாரிகளும் 201 இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர். ஒக்டோபர் மாதம் 11ஆம் நாள் முகமாலையில் இடம்பெற்ற சமரில் 17 அதிகாரிகளும் 124 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன் 24 அதிகாரிகளும் 490 இராணுவத்தினரும் காயமடைந்திருந்தனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலால் உலக மட்டத்தில் பாதுகாப்புக் கவலைகள்

## பாதுகாப்பு ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் கட்டுநாயக்காவில் உள்ள விமானத்தளத்தின் மீது நடத்தப்பட்ட விமானத்தாக்குதலானது தெற்காசியாவில் மாத்திரமல்லாமல் உலக மட்டத்திலேயே ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படும் என்று முன்னாள் மூத்த இந்திய அதிகாரியும் பாதுகாப்பு துறை ஆய்வாளருமான பி.ராமன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலை உலகின் ஏனைய பயங்கரவாத அமைப்புகளும் பின்பற்றலாம் என்று அஞ்சப்படுவதால் இது உலக மட்டத்தில் பெரும் கவலையை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக இந்திய அரசாங்க மட்டத்திலும் கவலைகள் அதிகரிக்கும் என்றும் கூறிய அவர், ஆயினும் இந்தியத் தரப்பால் உடனடியாக இது தொடர்பாக நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத்தால் தமிழர் பகுதிகளில் கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டு பல தமிழர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் அதற்குப் பதிலான தாக்குதல் என்று கூறப்படும் விடுதலைப்புலிகளின் இந்தத் தாக்குதலுக்கு எதிராக இந்தியா எதனையாவது செய்ய முயற்சிக்குமானால் அது தமிழ் நாட்டில் பெரும் எதிர்ப்பலைகளை உண்டாக்கலாம் என்று கூறும் ராமன் இதனால் இந்தியா இந்த விடயத்தில் எதனையும் செய்யாது என்றும் கூறினார்.

தமிழர் பகுதிகள் மீதான இலங்கை விமானப்படையின் தாக்குதல்கள் நிறுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே விடுதலைப்புலிகள் மீது சர்வதேச சமூகத்தினால் ஏதேனும் அழுத்தத்தைக் கொண்டு வரமுடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் இந்த விமானத் தாக்குதலைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை அவர்கள் எப்படி முன்னெடுக்கப் போகிறார்கள் என்பதன் மூலமும் மற்றும் அவற்றை இலங்கை அரசாங்கப் படையினர் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்துமே கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதல் ஒரு திருப்பு முனையா என்பது கணிக்கப்படும் என்று இலங்கை விவகார ஆய்வாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியில் இந்தத் தாக்குதல் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தும் என்றும் அதேவேளை சர்வதேச மட்டத்தில் இப்படியான கிளர்ச்சிக்குழு ஒன்றால் நடத்தப்பட்ட வான் தாக்குதல் மிகவும் உன்னிப்பாகப் பார்க்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (சு)

# இலங்கைக்கான விமான சேவைகளை இடைநிறுத்த உலக நாடுகள் முடிவு!

இலங்கைக்கான அனைத்து வானூர்தி சேவைகளையும் இடைநிறுத்துவதாக ஹொங்கொங் நாட்டின் உத்தியோகபூர்வ விமான சேவையான கதே பசுஃபிக் ஏயர்வேஸ் அறிவித்துள்ளது.

சர்வதேச விமான நிலையத்திற்கு மிக அருகில் உள்ள வான்படைத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த கிபீர் மற்றும் மிக்ரக வானூர்திகளை தாக்கியழிப்பதற்கு தமிழீழ வான்படை தனது இரு வானூர்திகளை பாவித்து வெற்றிகரமான தாக்குதலை நடத்தி விட்டு தளம் திரும்பியிருந்தன.

இச்சம்பவத்தினால் அருகில் இருக்கும் அனைத்துலக வானூர்தி நிலையத்திக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்று அந்நிறுவனம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆசியாவின் மூன்றாவது மிகப்பெரிய வானூர்தி சேவையாக பிரபலமடைந்துள்ள கதே பசிஃபிக் அங்கு நடைபெற்ற தாக்குதல் குறித்து விரிவாக ஆராய்ந்து நிலைமைகளைக் கண்டறிந்த பின்னர் தனது சேவையைத் தொடர்வது தொடர்பாக முடிபெடுக்க உள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை இலங்கைக்காக அனைத்து விமான சேவைகளையும் ஹொங்கொங் நாட்டின் உத்தியோகபூர்வ வானூர்தி சேவையான கதே பசுஃபிக் இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து மேலும் சில நாடுகள் வானூர்தி சேவையை இடைநிறுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றன.பாகிஸ்தானின் உத்தியோகபூர்வ வானூர்தி சேவையான பி.ஐ.ஏ தனது சேவையைத்தொடர்வது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்திருக்கின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இது தொடர்பில் முடிபு எடுக்கப்படும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகின்றது. இது போன்று தாய்லாந்து நாட்டின் உத்தியோகபூர்வ சேவையான தாய் ஏயர்வேஸ் நிறுவனமும் தனது சேவைகளை கொழும்புக்கு நடத்துவது தொடர்பாக எழுந்துள்ள பாதுகாப்புக் காரணங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் இவ்வாரத்துடன் தனது சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்த வாய்ப்பிருப்பதாகவும் கருத்து வெளியிட்டிருக்கின்றது. (ச)

## விடுதலைப்புலிகளின் ஆறு சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு உன்னிச்சை மோதல்களில் உயிரிழந்த ஆறு விடுதலைப்புலிகளின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் அம்பாறை வைத்தியசாலையில் வைத்து இச்சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குழுவினரிடம் ஒப்ப டைக்கப் பட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை உன்னிச்சையில் ஏற்பட்ட மோதலின் போது இவர்கள் கொல்லப்பட்டனர் (ச–3)

## வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சைகள் ஏப்ரல் நடுப்பகுதியில்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டுப்பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன.

இதன்படி வெளிவாரி மாணவர்களுக்கான வணிக முதற் தேர்வு மற்றும் வணிகமாணி பகுதி I ; பகுதி II; பகுதி III ஆகிய பரீட்சைகளே ஏப்ரல் மாத நடுப் பகுதியில் நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்பதிவுகள் பரீட்சை அலகு உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் ஏனைய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச–5)

# தாக்குதல் நடத்திய வான்...

தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது, கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்புலிகளின் இரு விமானங்கள் நேற்று அதிகாலை 12.45 மணிக்கு குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இத் தாக்குதல்கள் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் கிபீர், மிக் போர் தாக்குதல் விமானங்கள் நின்ற மூன்று தரிப்பிடத்தின் மீது நடத்தப்பட்டுள்ளன. இதன்போது விமானங்களுக்கும் வெடி பொருட்களுக்கும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

வெற்றிகரமாக தாக்குதலை நடத்திய விடுதலைப்புலிகளின் வான்புலிகளின் தாக்குதல் விமானங்கள் இரண்டும் பாதுகாப்பாக தளம் திரும்பியுள்ளன.

தமிழ் மக்களுக்கு பெரும் அழிவினை ஏற்படுத்தி வந்த இலங்கை வான்படையின் போர் வலுவுக்கு அழிவை ஏற்படுத்திய விடுதலைப்புலிகளின் விமானங்கள் இலங்கை படையினரின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் படையினர் வெளியிட்டுள்ள தகவலின்படி வீசப்பட்ட குண்டுகள் வான் படையின் பொறியியல் பகுதி விமானத் தரிப்பிடத்தில் வீழ்ந்து வெடித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

வான் படைத்தளப்பகுதி ஒரே புகை மண்டலமாக காட்சியளித்ததாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதலினைத் தொடர்ந்து அனைத்து விமானப் போக்குவரத்து சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டு எவரையும் உள் அனுமதிக்கப்படவில்லை. இலங்கையை நோக்கி வந்த விமானங்கள் அனைத்தும் இந்தியாவின் தமிழ் நாட்டின் சென்னை விமான நிலையத்திற்கும் டுபாய் வைரன் விமான நிலையத்திற்கும் திருப்பிவிடப்பட்டன.

2001ஆம் ஆண்டு கட்டுநாயக்காவை விமானப்படைத் தளத்தினுள் தரைவழியாக ஊடுருவிய புலிகளின் வான்படை, கிபீர், மிக் விமானங்களையும் ஏனைய படை வானூர்திகளையும் இலங்கை அரசின் மிகப்பெரும் பொருளாதார வளமான ஏயார் லைன்ஸ் போக்குவரத்து விமானங்களையும் அழித்து பெரும் இழப்பினை ஏற்படுத்தியது.

இப் பெருமிழப்பு இலங்கை அரசுக்கு பெரும் அரசியல் இராணுவ பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்த இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு வந்து போர் நிறுத்தத்தை செய்து கொண்டது.

அன்று முதல் போர் நிறுத்தம் பேரளவுக்கு நீடிக்கின்ற சந்தர்ப்பத்தில் மகிந்த அரசு தமிழ் மக்கள் மீது மிகக் கொடூரமான போரை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இலங்கை வான்படை தமிழ் மக்கள் மீது மிகப்பெரும் கொலை வேட்டையையே நடத்தி வருகின்றது. சம்பூர் படுகொலை, செஞ்சோலை இல்லத்தில் 53 மாணவிகள் படுகொலை, இலுப்பைக்கடவையில் 17 மக்கள் படுகொலை என அதிகளவில் மக்கள் படுகொலையை இலங்கை விமானப்படையின் கிபீர், மிக் விமானங்கள் நடத்தியுள்ளன.

வான்புலிகளின் தாக்குதல்கள் குறித்து தமிழ் மக்கள் பெருமிதமும் பெருமையுமடைய மகிழ்வினைப் பகிர்ந்து கொள்கின்றனர். தாயகத்திலும் புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் ஏனைய இடங்களிலும் விடுதலைப் போராட்டத்தின் புதிய பரிமாணம் குறித்த மகிழ்வுக் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன.

வன்னியிலும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் இனிப்புகளும் பொங்கல் பொங்கியும் மகிழ்ச்சியையும் கொண்டாடினர். அனைத்துலகம் தழுவிய ஊடகங்களிலும் இத் தாக்குதல் நேற்று முதன்மைச் செய்தியாக வெளியாகின. ஊடகங்களில் ஆய்வுகளின் இப் புதிய பரிமாணம் பற்றியதான விடயங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)

# முகமாலையில் பரஸ்பரம் தொடர் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகமாலை முன்னரங்க காவல் நிலையங்களை அண்டிய உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு தினங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி படையினரும் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி விடுதலைப் புலிகளும் மாறி மாறி ஷெல் தாக்குதல் நடத்தப்படுவதால் இப்பகுதியையண்டிய பிரதேசங்கள் அதிர்ந்த வண்ணம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்ந்து சென்றதினால் பெருமளவு உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் இடம் பெயர்ந்த மக்களின் வீடுகள் மற்றும் உடைமைகள் பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருப்பதுடன் பயன்தரும் மரங்கள் ஷெல் தாக்குதல் காரணமாக அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கட்டுநாயக்கா...

இயல்பு வாழ்க்கையை சீர் குலைக்கும் நோக்கில் இவ்வாறான தாக்குதலில் ஈடுபட்டுவருவதாக அரசாங்க 'தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

படையினரின் மனநிலைமையில் பாதிப்பை ஏற்படுத்த முயல்வதாகவும் எனினும் எந்த குழுவினருக்கும் தமது அரசியல் நோக்கங்களுக்கான இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ச-3)

## விடுதலைப்புலிகளிடம்...

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் ஊடாக பெருந்தொகை யான விமானப் பாகங்களை நாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட போது அதை சுங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

ஆனால் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தலையிட்டு அப்பாகங்களை விடுதலைப்புலிகள் கொண்டு செல்ல அனுமதியைப் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சி உதவி வழங்கி யதை பின்னாளில் கருணா குழுவினரும் ஏற்று உறுதிப்படுத்தியிருந்தனர்.

இத் தாக்குதலின் பின்னணியில் சதி முயற்சி ஒன்று இடம் பெற்றுள்ளதாகவும் நாம் சந்தேகிக்கின்றோம். ஏனெனில் கடந்த இரு வாரங்களாக மிக் 27 ரக விமானங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

விமானப்படைத் தளபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் ஊடகவியலாளர்களுக்கு இவ் விமானங்கள் தொடர்பான இரகசியங்களை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்குக் காரணம் எமது முன்னாள் அமைச்சர்கள் இருவர் இந்த விமானக் கொள்வனவு தொடர்பான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்தமையேயாகும்.

முன்னாள் அமைச்சர்களின் அவ்வாறான பிரசாரங்கள் மூலம் படையினரை சோர்வடையச் செய்வ தோடு விடுதலைப்புலிகள் தரப்பை பலமடையச் செய்ததன் அடிப்படையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அனைத்து வழிகளிலும் எமது படையினர் இத்தாக்குதலை முறியடித்து விட்டனர்.

நான் விமானத்துறை அமைச்சராக இருந்தபோது விடுதலைப்புலிகள் மிகப் பெரும்தாக்குதல் ஒன்றை 2001 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் மேற் கொண்டனர். தரை வழியாக கம்பி வேலிகளுக் கூடாக புகுந்து புலிகளால் நடத்தப்பட்ட அந்தத்தாக்குதலில் சுமார் 13 விமானங்கள் சேதமடைந்தன. 11 படை வீரர்கள் மரணமடைந்தனர்.

ஆனால், நேற்று நடத்தப்பட்டது விமானத் தாக்குதல் என்ற வகையில் சேதம் பாரியளவிலேயே இடம்பெற்றிருக்கவேண் டும். இருந்த போதிலும் எமது படையினர் விழிப்புடன் செயற்பட்டதன் காரணமாக அவ்வாறான பேரழிவுகள் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டுள்ளன.

சில வெளிநாட்டு ஊடகங்கள் இத்தாக்குதல் தொடர்பில் பிழையான செய்திகளை வெளியிட்டுள்ளன. புலிகள் தாக்க முற்பட்டது விமானப்படைத் தளத்தையே ஆகும். ஆனால் வெளிநாட்டு ஊடகங்களோ விமான நிலையம்தாக்குதலுக்குள்ளானதாகச்செய்திகளைவெளியிட்டன. இதன் மூலம் இலங் கைக்கு சர்வதேச ரீதியில் ஒரு நெருக்கடி நிலை ஏற் பட்டது.

எனவே தவறான செய்திகளை இவ்வாறு வெளியிடுவதிலிருந்தும் வெளிநாட்டு ஊடகங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார். (ச-5)

## இலங்கைக்கு...

அங்கு பொதுவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நிலைமை மிகவும் ஆபத்தானது.

தாக்குதல்களுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம். எந்நேரத்திலும் எங்கும் தாக்குதல் இடம் பெறலாம் என அவுஸ்திரேலிய அரசாங்கம் தனது அறிக்கையில் தெரி வித்திருக்கின்றது. இதே வேளை இங்கிலாந்து அரசும் தனது நாட்டு மக்களை இலங்கைக்குச் செல்லவேண்டாமென எச்சரித்துள்ளது. (ச-5)

## விமானத்தாக்குதல்...

பாதுகாப்புப் பிரிவின் பல வீனங்கள் தாக்குதலுக்குகாரணமான விடயங் கள் குறித்து இக் குழு ஆராயவுள்ளது.

இதேவேளை கட்டுநாயக்கா விமான நிலையம் தாக்குதலுக்கு உள்ளாவதற்கு 40 நிமிடங்களுக்கு முன் விடுதலைப்புலிகளின் விமானம் ராடர் கருவியில் பதிவாகியிருந்ததாக விமானப்படை தெரிவித்துள்ளது. (ச-3)

## வான்படையை...

இந்த விமானப் படையை பிரபாகரனின் மகன் இயக்குவதாக தெரியவந்துள்ளது.

ஆனால்வான்புலிகளிடம்எத்தனை சண்டைவிமானங்கள்உள்ளன. அவை எந்த ரகத்தை சேர்ந்தவை. அவற்றுக்கு ஓடுதளம் எங்கு உள்ளது. எத்தனை விமானிகள் இருக்கிறார்கள் என்பன போன்றவை மர்மமாக இருப்பதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது. (ச-5)


Hatton National Bank

அடகுப் பொருட்களை ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் 15/01/2006 இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித்திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் 31/03/2007 சனிக்கிழமை அன்று இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்,

- கடனுக்குரியவட்டியையும்கடனின் ஒருபகுதியையும் (ரூபா.500) செலுத்தி,

அல்லது

- தற்போதைய சந்தைப்பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

-முகாமையாளர்.

(C-662)



# திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

# மலையில் வீழ்ந்த துளிகள்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம்:- மார்ச் 28,29,30,31 ஏப்ரல் 01-2007 (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம்:- பி.ப.3.45 மணி

இடம்:- திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்களுக்கு...

தற்கால சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இம்முறை திருப்பாடுகளின் காட்சிக்கான அனுமதிகள் இலவசமாக்கப்பட் டுள்ளது. பார்வையாளர்கள் தமக்கான ஆசனங்களுக்கான இலவச அனுமதிச்சிட்டைகளைத் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*-திருமறைக் கலாமன்றம்*

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 2393

(C-663)








PONNAMMAH ARULAMPALAM

19Th DEATH ANNIVERSARY

1898 08 28 — 1988 03 27



Fondly Remembered by

Daughter-Ranee Selvarajah

Grand Children Dushan & Janey

(845)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.